


குலதனம்

போலக் கேசதனமும், சில குடும்பங்களில் பரம்பரையாக வருவதுண்டு. கேசதனம் படைத்தவர், அது நஷ்டமாகாமல் கேசவர்த்தினியைக்கொண்டு காப்பாற்றுங்கள். படைக்காதவர் கேசவர்த்தினியைக்கொண்டு அதை அடையுங்கள். சிறுவயது முதல் கேசவர்த்தினி ஒன்றையே உபயோகித்துவருவதால், இளநரை வழுக்கைகளைத் தடுத்துக் கேச ஆரோக்கியத்தையும் கேச சம்பத்தையும் தவறாமல் பெறுங்கள்.

மெலிந்து இளைத்த சிறுவனும் தேகப்பயிற்சி ஆகாரங்களால் பருத்து அழகிய சதைக்கட்டைப்பெறுவதுபோல, அற்ப கூந்தல் படைத்தவரும் கேசவர்த்தினியைக்கொண்டு அபரிமிதமான கூந்தலைப் பெறலாம்.

குழந்தையின் கூந்தலைக் கேசவர்த்தினிகொண்டே விருத்தி செய்யுங்கள்.

**கேசவர்த்தினி**

கூந்தலைக்காப்பது. விருத்தி செய்வது, அழகுபடுத்துவது விலை அணா 12; மேற்செலவு வேறு. எல்லாக்கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:

தென் இந்திய ரஸாயன சாலை.
ஆர். எஸ். புரம் - கோயமுத்தூர்.

வி.எச்.ஆர் வருங்காயம்




பெப்ஸ் தவறாமல் உட்கொண்டு இருமல், ஜலிப்பு மார்பு கோளாறுகளை ஒழியுங்கள்.



கடுமையான இருமல் சுவாச காசம் அல்லது மார்புக் கோளாறுகளால் அவதிப் படாதீர்கள். எப்பொழுதும் பெப்ஸ் கிருமிநாச சுவாச மாத்திரைகளை கைவசம் வைத்திருங்கள்.

பெப்ஸ் வாயில் கரைந்தவுடன் ஏற்படும் மருந்து பூர்வமான ஆவி, சுவாசத்துடன் கலந்து, சுவாசப்பைக்குச் செல்லுகின்றது. இருமலால்புண்பட்ட சுவாசகுழாய்களுக்கு சமனமூட்டி, குணப்படுத்தும். தொண்டை கரகரப்பு, மார்பு பலஹீனம் முதலியவற்றைப் போக்கும். ஜலிப்பு, இன்புளூயென்ஸா, எல்லாவித இருமலுக்கும் பெப்ஸ் உயரிய நிவாரணி. எல்லா மருந்து வியாபாரிகளும் பெப்ஸ் ரூ. 1 வீதம் விற்கின்றனர். ஏஜண்டுகள்: மெஸர்ஸ் தாதா அண்டு கம்பெனி, பி. டி., மதராஸ்.




எப்பொழுதும் பெப்ஸ் உட்கொள்க.

**PEPS**

கிருமிநாச சுவாச மாத்திரைகள்.


டோங்ரேயின்
பாலாமிருதம்
பிரசித்தி பெற்ற
குழந்தைகளின் டானிக்

இஸ்லாமிய நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| மஹான் முகம்மது நபி | 0 | 8 | 0 |
| அபுபக்கர் ஸித்திக் | 0 | 12 | 0 |
| உமரெ பாரூக் | 1 | 0 | 0 |


முஸ்லீம் வாசகம் 1-5 வகுப்புவரை கிடைக்கும்.
ஷாஜஹான் புக் டெப்போ,
நாச்சியர் கோவில்.

இனம் வைத்திய வித்தை
பூர்ண ஆரோக்கியம், இன்ப வாழ்க்கை, நல்ல சந்ததிக்கும் வழி.
மதன மஞ்ஜரி பார்மஸி, 184 சைனா பஜார், மதராஸ்.



கே. சுவாமிநாதன் & கோ

24, எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்.
ரைஸ் மில், மாவு மில், சீக்காய் & காபி மிஷின், பம்பு வியாபாரமும், எல்லாவித காஸ்டிங் வேலைகளும், ஆயில் எஞ்சின் ரிப்பேர்களும் செய்யப்படும்.
சுவாமிநாதன் பவுண்டரி எஞ்சினீரிங் ஒர்க்ஸ்,
7, வால்டாக்ஸ் ரோட், P. T., மதராஸ்.



பிராஞ்சு:- பெனிங்டன் ரோடு, தஞ்சாவூர்.

பிரபல ஜோதிஷர்



மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 1 மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதுநேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், திருநீர்மலை, குரோம்பேட்டை போஸ்டு, எஸ். ஐ. ஆர்.

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானல், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினல் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

சூதகம் நின்றிருந்தால்

3 நாட்டுகள் என்னும் மாத்திரைகளை 3 நாளைக்கு உபயோகித்தால் ஒழுங்கு பட்டுவிடும். ஒவ்வொரு ஆர்டருடன் உத்தரவாதம் அனுப்பப்படும். விலை ரூ. 5/8. பத்து ஷிலிங்.
Dr S. H. KHAN, (S. M.) 42,
Churchgate St., Fort. Bombay.
Phone 21343.

நவயுகப் பிரசுரங்கள்


| | | |
|---|---|---|
| வானெலியும் ஒளிபரப்பும் | 2 | 0 |
| புதுமைப்பித்தன் கதைகள் | 2 | 0 |
| தமிழ்க் குமரி | 1 | 12 |
| திருச்சி ஜெயில் | 1 | 12 |
| பெண் | 1 | 12 |
| கிரஹதாகம் (பாகம் 1) | 1 | 12 |
| ஷை (பாகம் 2) | 1 | 12 |
| மின்சாரத்தின் விந்தை | 1 | 12 |
| மகாராஷ்டிர ஜீவன் உதயம் | 1 | 12 |
| தற்காலத்தமிழ் இலக்கியம் | 1 | 8 |
| இந்தியாவும் பொதுநல சமுதாயமும் | 1 | 8 |
| கட்ட பொம்மு | 1 | 8 |
| வின்ஸ்டன் சர்ச்சில் | 1 | 8 |
| பேஸிஸ்ட் ஜடாமுனி | 1 | 8 |
| ஆரம்ப அரசியல் நூல் | 1 | 8 |
| நடைச் சித்திரம் | 1 | 8 |
| மழையும் புயலும் | 1 | 8 |
| உலகம் பலவிதம் | 1 | 4 |
| ஸ்டாலின் | 1 | 4 |
| பாதுகா பட்டாபிஷேகம் | 1 | 4 |
| ஆங்கிலக் கவிதை மலர்கள் | 1 | 0 |
| ஷை பரிசுப் பதிப்பு | 1 | 8 |
| அருள் மொழிகள் | 1 | 0 |
| தமிழ் அறிஞர் முதலியார் | 1 | 0 |
| அற்புத உலகம் | 1 | 0 |
| உலகத்துச் சிறுகதைகள் | 1 | 0 |
| தேவ்தாஸ் | 1 | 0 |
| பாகிஸ்தான் | 1 | 0 |
| கோயரிங் | 0 | 12 |
| வெற்றி யாருக்கு? | 0 | 12 |
| சீதா கல்யாணம் | 0 | 12 |
| மாதவி | 0 | 12 |
| மூப்பெருந் தலைவர் | 0 | 10 |
| சிந்தனையும் மின்னெளியும் | 0 | 10 |

சுதேசமித்திரன்
புத்தகசாலை, சென்னை.



# சுதேசமித்திரன்

## வாரப்பதிப்பு

Vol. 13 No. 25 19-7-'42 Price 2 Annas





தமிழ் நாடு காங்கிரஸ் காரியக்கமிட்டி கூட்டம் நகரில் இவ்வாரம் கூடியபோது எடுத்த படம்.

# ஒழுங்கு நடவடிக்கை

## ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன்

விஷயத்திலிருந்த கவனம் கலங்கிவிட்டது; விளக்கத்திலிருந்த கவலை கரைந்துவிட்டது. கவனமும் கவலையும் ஒழுங்கு முறையில் இறங்கிவிட்டன. வாதத்தை அடக்க குறுக்கு வழி கண்டுபிடித்துவிட்டனர். ராஜாஜிக்கும் அவர் சகாக்களுக்கும் ஒழுங்கு நோட்டீஸ் சாதரா செய்யப்பட்டுவிட்டது. நோட்டீஸில் அவர் கூறியதாகக் குறிப்பிடப்பட்டிருப்பவை உண்மையென வைத்துக்கொள்வோம். அவ்வாறு கூற அவருக்கு உரிமையுண்டா என்று கேள்வி எழுகிறது. உண்டென்பதே நமது அபிப்பிராயம். சட்டசபை அங்கத்தினர் ஹோதாவில் கொடுத்த வாக்குறுதியைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதனால் சாதாரண காங்கிரஸ்வாதிகளைக் கட்டுப்படுத்தாத ஒரு தடை ஏற்பட்டுவிட்டதாக நினைப்பது தவறு. சட்டசபை உறுதிமொழி, சட்டசபை நடவடிக்கை சம்பந்தப்பட்டவரையில் தான் செல்லும். சட்டசபை அங்கத்தினர் ஒழுக்கக்குறைவாக நடந்து கொண்டால் கண்காணிப்பு சட்டசபைக் கட்சிக்கே உண்டு. அவசியமானால் பார்லிமெண்டரி போர்டு குறுக்கிடலாம். மாகாணக்காங்கிரஸ் நிர்வாகிகளுக்கு அதிகாரம் இல்லை, அவர்கள் நடவடிக்கை எடுப்பதானால் சாதாரண காங்கிரஸ்காரர் மீது எடுக்கக்கூடிய நடவடிக்கையே எடுக்கலாம். அப்படி உத்தேசமிருப்பதாகக் காணவில்லை. எடுக்கவும் இடமிருப்பதாக நாம் நினைக்கவில்லை. ஒழுங்கு விதிகளுக்கும் வியாக்கியானம் செய்கையில் ஒன்றை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். காங்கிரஸின் அடிப்படையான தர்மத்திற்கு விரோதமாக அர்த்தம் செய்வது தவறு. காங்கிரஸ் கோருவது சுதந்திரம். காங்கிரஸ்காரர்களுக்குப் பேசவும், பிரசாரம் செய்யவும் உரிமையில்லை என்று சொல்ல முடியுமா? காங்கிரஸ், கட்சி முறையில் கார்யத்தில் இறங்கும்போது, கட்டுப்பாடும் காய்தாவும் தேவையென்பதை யாரும் மறுக்கவில்லை. ஆனால் இன்று காரியம் ஒன்றும் விதிக்கப்படவில்லை. அபிப்பிராயமே உருவாகி வருகிறது. காங்கிரஸ் அங்கத்தினர்களிடையே உள்ள அபிப்பிராயத்தை அறியவே சீக்கிரத்தில காங்கிரஸ் தேர்தல்களும் நடக்கப் போகின்றன. அதற்கு பூர்வாங்கமாக பிரசார வசதி தேவையில்லையா? பிரசாரத்தைக் கட்டுப்படுத்தவோ மட்டுப்படுத்தவோ முயற்சி செய்யப்படுமானால், நியாயவாதிகள் ஒப்புக்கொள்ளக்கூடிய நிலைமை அதுவல்ல. காங்கிரஸுக்கு பலம் கட்டவும் வழி இதுவல்ல விதிகளின் வரையறைகளை ராஜாஜி நன்ருய் அறிவார். அதற்குக் கட்டுப்பட்டே நடக்க முயன்றிருக்கிருர். நிர்வாக பதவியொன்றையும் காங்கிரஸ் சபைகளில் வைத்துக் கொள்ளவில்லை. காங்கிரஸ் ஆதரவில் கூட்டமும் கூட்டவில்லை. காங்கிரஸ் செல்வாக்கை தகாத முறையில் உபயோகிக்கவும் இல்லை. அவருக்கு ஒழுங்கு நோட்டீஸ் பிறப்பித்தது எவ்விதத்திலும் ஒழுங்கல்ல

* * * * * * * *

ராஜாஜியின் மீது ஒழுங்கு நடவடிக்கை தொடுத்து விட்டனர். சம்பிரதாய முறையில் சமாதானம் கேட்டிருக்கின்றனர். என்ன சமாதானம் சொல்லப்போகிருர்? எது சொன்ஞல் ஏறப்போகிறது? செய்தது தவறு என்று சொல்லப்போவதில்லை; செய்தது சரி என்ருல் கேட்கப்போவதில்லை. இதற்கு ஒரு முடிவு தான் உண்டு. காங்கிரஸை விட்டு விலக நேரிடும் தானாக விலகாவிட்டால் விலக்கிவிடக்கூடும். நஷ்டம் யாருக்கு? யோசித்தார்களா அதை? யோசிக்காவிட்டால் இனியாவது யோசிப்பார்களா?

தமிழ் நாட்டிலே காங்கிரஸுக்கு ஆக்கம் அளித்தவர் ராஜாஜி; ஆதிக்கம் தேடியவர் அவர். சுயநலம் கருதாது உழைத்தார்; சர்வத்தையும் தியாகம் செய்தார். தன் ஒழுக்கத்தாலும் சாமர்த்தியத்தாலும் தமிழ் நாட்டுக்கே எங்கும் பெருமை உண்டாக்கினர். வயதேறி வருகிறது. ஆசைகளெல்லாம் அடங்கிவிட்டன. எஞ்சியிருப்பது ஒரே ஒரு ஆசை தான்: நாட்டின் விடுதலையைக் காண; இதற்கு இயன்றளவு உதவ. காங்கிரஸில் உழைக்க அவருக்கு வசதியில்லையென்ருல், குறை யாருடையது? காந்தீயத்தின் அடிப்படை, உண்மையைக் கடைப்பிடித்தொழுகுதல். உண்மைக்காக உழைப்பவருக்குக் காங்கிரஸில் இடம் இல்லையா?

ராஜாஜிக்கு ஒழுங்கு நோட்டீஸ் பிறப்பித்தது ஒழுங்கல்லவென்று நோறு எடுத்துக் காட்டினேம். ராஜாஜியின் சேவை காங்கிரஸுக்கு இன்றியமையாதது. அவர் விலக நேர்ந்தால், தமிழ்நாடு சம்பந்தப்பட்ட வரையில் காங்கிரஸ் உருக்குலைந்துவிடும். நபரைவிட ஸ்தாபனம் பெரிதெனலாம். இரண்டையும் பிரித்துப் பேசுவானேன்? சேர்ப்பதில் முயற்சி செல்ல வேண்டும். காங்கிரஸ் கட்டுப்பாட்டை மீறி ஏதும் அவர் செய்துவிடவில்லை; காங்கிரஸுக்கு இன்னும் பலம் கட்டவே முயன்ருர். அபிப்பிராய பேதம் இருக்கலாம் அபிப்பிராயத்தை அடக்கத் தண்டோபாயம் பயன்படாது. சரித்திரம் கண்ட உண்மை இது. பெரிய ஸ்தாபனத்தில் சிறிய புத்தி ஓங்கினல், விபரீதமாக முடியும்.

காங்கிரஸுக்கு இது சோதனைக் காலம். வெளியிலே இருக்கும் நெருக்கடி போதும்! உள்ளேயும் ஒன்று வேண்டாம்! நிலைமையைப் பரிஹரிக்க இரண்டு வழிகளே உண்டு. ஒன்று தமிழ் நாடு கார்யக்கமிட்டி நோட்டீஸை வாபீஸ் பெற வேண்டும்; அல்லது காங்கிரஸ் கார்யக் கமிட்டி குறுக்கிட வேண்டும். இரண்டிலும் கண்யக் குறைவு ஒன்றுமில்லை. பெருமை பாராட்டிப் பழி கொடுப்பதில் பலனேது? பொழுது விடிந்தால் கவர்ன்மெண்டாரை இந்த புத்திப் பிரவ்ருத்திக்குக் கண்டிக்கிறேம். சமயம் நேரும்பொழுது நம் வழி வேறு என்பதைக் காட்டுவோம். காலம் தாழ்த்தக் காலமில்லை. சம்பந்தப்பட்டவர்கள் உடனே கவனிப்பார்களா?

மேற்கண்டதை எழுதி முடித்து அச்சுக் கோர்த்து பிழை திருத்துகையில் ராஜாஜியின் ராஜிநாமாக் கடிதம் வந்துவிட்டது. இவ்வளவு வேகமாக கார்யம் முற்றிவிடும் என்று எதிர்பார்க்கவில்லை இனி என்ன நடக்கப் போகிறது? மகாத்மா குறுக்கிட்டாலொழிய நிலைமை திருந்தும் என்று நினைக்க இடமில்லை.

(இவை இரண்டும் இம்மாதம் 8-ம்தேதியன்றும், 9-ம்தேதியன்றும் முறையே எழுதப்பட்டவை)